**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.148/20**
**வழக்கு சாட்சி – அ.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வடிவேல் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | முருகன் | தொழில் | ஓட்டுனர் |
| கிராமம் | கெப்புரங்கன்பட்டி | சமயம் | |
| தாலுக்கா | போடி | வயது | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.24

**( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

எதிரியை தெரியும். அசா1 ஐ தெரியும். அவர் எனது தம்பி. கடந்த 28.10.19 அன்று மதியம் 12 .45 மணி முதல் 1 மணியளவில் அசா1 ஆற்றுக்கு குளிக்க சென்றுவிட்டு வரும் போது கையில் இரத்தகாயத்துடன் வந்தார். அவரிடம் விசாரித்த போது ஒரு பாட்டிக்கு நொச்சி இலை பிடுங்க சென்றதாகவும், கோவில் பூசாரி அருவாளால் கையில் வெட்டிவிட்டதாகவும், திரும்ப இங்கு வந்தால் கொன்றுவிடுவதாக மிரட்டியதாகவும், தகாத வார்த்தையால் பேசியதாகவும் கூறினார். என் தம்பிக்கு கையில் காயம்இருந்தால் நேரடியாக பிசிபட்டி காவல்நிலையம் சென்றோம். அங்கு இருந்த காவல் ஆய்வாளர் காயத்தை பார்த்து க.விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த பிற்கு சிகிச்சை அளித்தார்கள். அதன்பின்பு மருத்துவமனையில் இருந்த நபர் விசாரித்தார்கள். பிசிபட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் விசாரித்தார். என் தம்பி மயக்கநிலையில் இருந்ததால் எப்ஐஆர் வாங்கிவிட்டு என் தம்பியின் கைரேகை வைத்தார்கள். அதில் நான் சாட்சி கைபெயப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சண்டை நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் தம்பியை இரத்தகாயத்துடன் பார்க்கும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் 1 மணி இருக்கும். நாங்கள் காவல்நிலையம் செல்லும் போது 1.45 மணி இருக்கும். காவல்நிலையத்திலிருந்து மருத்துவநமுனா எதுவும் கொடுக்கவில்லை. காவல்நிலையத்திற்கு என் தம்பியும் உடன் வந்தார். பிசிபட்டி போலிசார் மருத்துவமனை வரும் போது 3.30 மணிஇருக்கும். மருத்துவமனையில் நாங்கள் சேரும் போது 3.20 மணி இருக்கும். என் தம்பி எவ்வளவு நேரம் மயக்கநிலையில் இருந்தார் என்றால் அரைமணி நேரம் மயக்கநிலையில் இருந்தார். போலிசார் வரும் போது அரைமயக்கநிலையில் இருந்தார். அரைமயக்கத்திலிருந்ததால் உலறி உலறி பேசினாரா என்றால் இல்லை. போலிசாரிடம் வாக்குமூலம் நான் கொடுத்தேன். அந்த பேப்பரில் தான் அசா1 டம் கைரேகை பெற்றார்கள் என்றாலும் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றாலும் சரிதான். எதிரியினால் என் தம்பிக்கு எந்த காயம் ஏற்படவில்லை என்றாலும் என் தம்பி செய்த தவறை மறைப்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அசா1 என் தம்பி என்பதால் அவருக்கு ஆதவராக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.